சுருக்கம்

தொழிலாளர் நலம் – 2018–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையினையொட்டி, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 12.01.2018 அன்று சிறப்பு விடுமுறை அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜெ1)த் துறை

அரசாணை (வாலாயம்) எண்.6 . நாள் 11.01.2018

ஹேவிளம்பி வருடம், மார்கழி 27
திருவள்ளுவர் ஆண்டு 2048
படிக்க:

ஆணை:–

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள், தமிழ்நாட்டிலுள்ள பிறமாவட்டங்களில் இருந்து வந்து மேற்படி மூன்று மாவட்டங்களில் அதிக அளவில் பணிபுரிகின்றனர். இந்த சூழ்நிலையில், தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை, அவரவர்களின் சொந்த ஊருக்கு தகுந்த நேரத்தில் சென்றடைந்து அவரவர் குடும்பம் மற்றும் உறவினர்களுடன் சீரிய முறையில் கொண்டாடும் பொருட்டு, சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, சிறப்பு நிகழ்வாக, 1958–ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், பிரிவு 3 (2) இன் கீழ் வருகின்ற 12.01.2018 (வெள்ளிக்கிழமை) அன்று ஒருநாள் மட்டும் விடுமுறை அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா,
அரசு முதன்மைச் செயலாளர் .

பெறுநர்
தொழிலாளர் ஆணையர் , சென்னை–6
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர், சென்னை–32.
நகல்
சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள். (தொழிலாளர் ஆணையர் வழியாக)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

11.1.2018

பிரிவு அலுவலர்.

11/1/18